P.R. No:. 1055 PRESS RELEASE நாள்:. 1.12.2010.

**Tamilnadu Generation and Distribution Corporation Limited**
**Launching of Online Payment of Low Tension Electricity Bill and ECS payment of High Tension Bill through out the State**

**Date : 01.12.2010**

**Time : 11.00 A.M.**

**Place : Howard Hall, TANGEDCO, Chennai-2.**

There were about 1.77 crores of Low Tension consumers and 7000 High Tension consumers during the year 2005 and during the last 5 years the number of consumers has grown to 2.1 crores at a growth rate of 18% in respect of LT consumers and 7% growth in respect of HT consumers. During the next 5 years the growth rate is expected to be more, owing to the increasing standards of living.

Around 1 crore of consumers pay their bills every month in about 2711 collection centers spread across the state. Presently 15 days assessment and 15 days collection are being resorted to. Even though the collection centres are spread wide across, it has been a general tendency among the public to pay their bills around their due date only (ie by 15th of every month) and hence some times there is a heavy crowd at some of the collection counters towards the due date leading to much chaos.

To overcome this problem, many steps have been taken as furnished below by the erstwhile Tamil Nadu Electricity Board and presently TANGEDCO through introducing various collection methodologies for the Low Tension consumers, who contribute the major share.

TANGEDCO has so far introduced the following collection methodologies to ease the payment of Low Tension electricity bills for the consumers of Chennai Regions since September 2008 and expanded in stages to Coimbatore Region also during June 2010.

1) Any Time Payment (ATP) Machines:

   Since April 2008, the Chennai consumers can make their Low Tension CC charges payment throughout the day, through Any Time Payment machines available at Anna Salai. This was further expanded to the other 3 locations of Chennai viz., Wallajah Road, T.Nagar and Seven Wells. As there is an over whelming response from the consumers for this mode of payment, further expansion for providing 50-100 Nos. ATP machines at Coimbatore and Tirupur are on the anvil and also further provision of 100 Nos. ATP Machines throughout the state has also been envisaged.

2) Online Payment to the consumers of Chennai North, South and Coimbatore Regions have been introduced through the following Banks, since September 2008 and expanded in a phased manner.

   a. Payment Gateway : ICICI Bank, Axis Bank
   b. Net Banking : ICICI Bank, Axis Bank, IOB, Indian Bank, City Union Bank.
   c. Debit Card : Indian Bank, IOB, Canara Bank.

Service Charges of 2.09% of the Bill Amount is being collected by the banks through payment gateway, while a flat rate of Rs.5/- upto a bill amount of Rs.500/- and Rs.10/- there upon through Debit Cards. There is no Service Charges for Net Banking Payments. About 75000 consumers are paying their electricity bills per month through above modes of payment.

The Consumers can pay their bills from their homes in the above process. All the Domestic Consumers, Educational Institutions, Private Hospitals, Small and Medium Industries, Commercial Establishments, etc., are benefited by these modes of payments.

3) **Payment through India Post :**

LT Bill collection facilities have been extended through the 50 branches of India Post offices in a phased manner since March 2010. In this mode of payment, Rs.5 /- per transaction is being collected from the consumers at the Post Office end towards Service Charges. Presently, around 2000 of Chennai consumers are utilizing this facility every month. Further expansion will be done in a phased manner through out the state shortly after sorting out the software problems at Post Office end.

4) **Collection through Hand Held Devices** :

Presently, manual camp collection of CC charges is being done in the remote villages where the transportation facilities are minimal. 500 Nos. Hand Held Devices with printers have now been provided to all the regions for the above purpose, to enable the public in the remote villages to make their payments of CC charges. The software for the above has been now made ready and is under testing. This facility will also be deployed shortly throughout the state.

5) **30 days Assessment and Collection**:

To further avoid a large crowd at the fag end of the collection period and to scatter the crowd throughout the month, 30 days assessment and collection was introduced to the 32 Lakhs LT consumers of Chennai Regions in stages since 01.06.2009 and subsequently expanded to 20 Lakhs LT consumers of Coimbatore region also from 01.11.2010. This is to be further expanded to 25 Lakhs LT consumers of Erode Region from 01.12.2010 onwards.

6) **High Tension Bill Collection through ECS** :

At present, ECS mode of payment for HT consumers is being carried out for Chennai Consumers alone. It is further to be expanded throughout the state from 01.12.2010 onwards.

7) **Re-Structured Accelerated Power Development and Reforms Programme (RAPDRP)** :

Various measures have also been taken by TANGEDCO for reducing line losses by provision of systematic improvements to the Distribution Network and measuring the energy inputs through R-APDRP schemes of Government of India and avoiding losses wherever possible through IT implementation.



[redacted]

The following further facilities to be provided are :

1) Online Bill Collection through Net Banking of HDFC Bank, SBI, Karur Vysya Bank, Canara Bank, Bank of Baroda.

2) Online Bill Collection through Payment Gateway of IOB and Bank of Baroda.

3) Online Bill Collection through ATM of IOB.

4) ECS collection for payment of CC charges by the treasuries department.

The above facilities are being introduced for improving the consumer satisfaction and to ease the public in making their electricity bill payments etc. It is expected that the present rate of 3% payment through online will increase drastically in future.

The necessary Hardware and Software at a cost of Rs. 3 Crores has been implemented in order to extend the above facilities throughout the State, so as to reach all the consumers of Tamil Nadu.

The facilities of Online Payment and HT Bill Payment through ECS are now extended throughout the State today and dedicated to the entire consumers of Tamil Nadu.

It is requested that the consumers may make use of the above facilities and get benefited.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

செ.வெ.எண்: 1055 நாள்: 1.12.2010

செய்திக்குறிப்பு

<u>தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தாழ்வழுத்த மின் நுகர்வோர்கள் மற்றும் உயர்வழுத்த மின் நுகர்வோர்கள் தங்களின் மின் கட்டணத்தை முறையே இணைய தளம் மற்றும் மின்னணு கணக்கு சேவையின் மூலம் தமிழ்நாடு முழுவதும் செலுத்தும் சேவையின் தொடக்க விழா</u>

<u>நாள் – 01.12.2010</u>
<u>நேரம் – காலை 11.00 மணியளவில்</u>
<u>இடம் – ஹோவர்டு அரங்கம், த.உ.ப.க., சென்னை–02.</u>

சுமார் 1.77 கோடி தாழ்வழுத்த மின் நுகர்வோர்களாகவும் மற்றும் 7000 உயர் மின் அழுத்த மின் நுகர்வோர்களாகவும் 2005 லிருந்த நுகர்வோர்கள் தற்பொழுது முறையே 2.1 கோடியாகவும், 7502 மின் நுகர்வோர்களாக பெருகி உள்ளனர். கடந்த 5 ஆண்டுகளில் இந்த வளர்ச்சி முறையே 18 விழுக்காடு மற்றும் 7 விழுக்காடு அதிகமாகும். மேலும் அடுத்த 5 ஆண்டுகளில் இவ்வளர்ச்சி பல்கி பெருக வாய்ப்பு உள்ளது.

சுமார் 1.0 கோடி மின் நுகர்வோர்கள் மாதந்தோறும் தங்களது தாழ்வழுத்த மின் கட்டணங்களை 2,711 வசூல் மையங்கள் மூலமாக செலுத்தி வருகிறார்கள். தற்பொழுது 15 நாட்கள் மின் கணக்கீடு மற்றும் 15 நாட்கள் வசூல் என்ற முறை நடைமுறையிலுள்ளது. வசூல் மையங்கள் பரவலாக இருந்த போதிலும் மின் கட்டணத்தை இறுதி நேரத்தில் செலுத்த வரும் மின் நுகர்வோர்களின் கூட்டம் சில நேரங்களில், சில இடங்களில் அதிகமாக இருப்பதால், நுகர்வோர்கள் நீண்ட வரிசையில் நின்று கட்டணம் கட்டும் சூழ்நிலைக்கு உள்ளாகிறார்கள்.

இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் (தற்பொழுது தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்) தாழ்வழுத்த மின் கட்டணத்தை இணையதளத்தின் மூலம் செலுத்தும் பல்வேறு வழிமுறைகளை ஏற்கனவே சென்னையில் செப்டம்பர் 2008ல் தொடங்கப்பட்டு படிப்படியாக கோயம்புத்தூர் மண்டலத்திற்கும் ஜீன் 2010 ல் முதல் விரிவுப்படுத்தப்பட்டு கீழ்கண்டவாறு நடைமுறையிலுள்ளது.

1. கணியகம் (Any Time Payment (ATP) Machines) :

   ஏப்ரல் 2008 முதல் சென்னை மாநகர மின் நுகர்வோர்கள் தங்களது தற்போதைய மின் பயனீட்டு கட்டணத்தை கணியகங்களில் செலுத்தும் வசதி செய்யப்பட்டது. அண்ணாசாலையில் முதல் முதலில் தொடங்கப்பட்ட இவ்வசதி, பின்னர் படிப்படியாக வாலாஜா ரோடு, தி.நகர், ஏழுகிணறு ஆகிய 3 இடங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. மேலும் இவ்வசதியை கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு 50 முதல் 100 இடங்களுக்கு விரிவுவாக்கும் பொருட்டு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மேலும் தமிழகம் முழுவதும் இவ்வசதி விரிவாக்கும் நோக்கில் 100 கணியகங்களுக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரப்படவுள்ளன.

2. இணையதளம் மூலம் குறைந்த மின்அழுத்த நுகர்வோர் மின் கட்டணம் செலுத்தும் வசதி சென்னை வடக்கு, தெற்கு மற்றும் கோவை மண்டலங்களில் கீழ்க்கண்ட வங்கிகள் மூலம் செப்டம்பர் 2008 தொடங்கி படிப்படியாக விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

அ) வங்கி கடன் அட்டை மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி

1) ஆக்ஸிஸ் வங்கி 2) ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி

இவ்வசதியின் மூலம் மின் கட்டணம் செலுத்தும் நுகர்வோர்கள் மின் கட்டணத்தில் 2.09 சதவீதம் சேவை கட்டணமாக வங்கிகளுக்கு செலுத்த வேண்டும்.

ஆ) வங்கி இணையதளம் (Net Banking) மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி (வங்கி வலைதளம்)

1) ஆக்ஸிஸ் வங்கி 2) ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி 3) இந்தியன் வங்கி

4) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 5) சிட்டி யூனியன் வங்கி

இச்சேவையை பயன்படுத்தும் மின் நுகர்வோர்கள் மின் கட்டணத்தை தவிர வேறு எந்த கூடுதல் கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

இ) வங்கி பண அட்டை (Debit Card) மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி

1) இந்தியன் வங்கி 2) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 3) கனரா வங்கி.

இச்சேவையின் மூலம் கட்டணம் செலுத்துவோர், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் சேவைக்கட்டணமாக செலுத்த வேண்டும்.

மாதந்தோறும் சுமார் 75000 சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள மின் நுகர்வோர்கள் இவ்வசதியின் மூலம் கட்டணம் செலுத்தி வருகின்றனர்.

இருந்த இடத்திலிருந்தே மின் கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்தும் வசதிகள் மூலம், வீட்டு மின் இணைப்புகள், கல்வி நிறுவனங்கள், தனியார் மருத்துவ மனைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் என அனைத்து தரப்பு மின்நுகர்வோர்களும் பயன்பெறுவர்.

3. அஞ்சலகம் மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி

சென்னையிலுள்ள குறிப்பிட்ட 50 அஞ்சலகங்கள் மூலம் தாழ்வழுத்த மின் கட்டணம் செலுத்தும் வசதி 01.03.2010 முதல் படிப்படியாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மின் நுகர்வோர்கள் கட்டணம் செலுத்தும் போது ஒரு மின் இணைப்பிற்கு ரூ.5 ஐ சேவைக்கட்டணமாக அஞ்சலங்களுக்கு செலுத்த வேண்டும். இத்திட்டம் தற்பொழுது மென்பொருளிலுள்ள சில குறைகளை அஞ்சலகம் சரிசெய்த பின்னர் பல்வேறு கட்டங்களாக தமிழ்நாடு முழுவதும் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

4. கையடக்க கருவி மூலம் பணம் செலுத்தும் வசதி:

தற்பொழுது, போக்குவரத்து வசதி குறைவாகவுள்ள கிராமப்புற பகுதிகளில் முகாம் வசூல் மூலமாக மின் கட்டணங்கள் வசூலித்து கைப்பிரதி இரசீதுகள் வழங்கும் வசதி நடைமுறையிலுள்ளது. இவ்வசதியை மேலும் செம்மையாக்கும் வகையில் 500 அச்சுப்பொருத்திய கையடக்கக் கருவிகள் அனைத்து மண்டலங்களுக்கு மின் கட்டணம் வசூலிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு வருகிறது. இவ்வசதி விரைவில் அனைத்து மண்டலங்களுக்கும் செயலாக்கப்படவுள்ளது.

5. 30 நாட்கள் மின் கணக்கீடு மற்றும் வசூல்

கடைசி நேர மின் கட்டண கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காக 30 நாட்களும் மின் கணக்கீடு மற்றும் வசூல் செய்யும் திட்டம் 32 இலட்சம் கொண்ட சென்னை தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கு 01.06.2009 முதல் அமல்படுத்தப்பட்டது. பின்னர், இத்திட்டம் 20 இலட்சம் கொண்ட கோவை மண்டல தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கும் 01.11.2010 விரிவாக்கம் செய்யப்பட்டது. இத்திட்டம் மேலும் 25 இலட்சம் கொண்ட ஈரோடு மண்டல தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கும் 01.12.2010 விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

6. உயர்வழுத்த மின் நுகர்வோர்கள் மின்னணு கணக்கு சேவை மூலம் **(ECS)** கட்டணம் செலுத்தும் வசதி

இவ்வசதி சென்னை நுகர்வோர்களுக்கு மட்டும் தற்பொழுது நடைமுறையிலுள்ளது. மேலும் இவ்வசதி தமிழகம் முழுவதும் இன்று முதல் (01.12.2010) விரிவுப்படுத்தப்படுகிறது.

7. **Re-Structured Accelerated Power Development and Reforms Programmes (RAPDRP** திட்டம்)

தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேலும் பல்வேறு திட்டங்களை இந்திய அரசின் RAPDRP என்ற திட்டத்தின் மூலம் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினை பயன்படுத்தி மின் கட்டமைப்பில் ஏற்படும் மின் இழப்பினை குறைப்பதற்கான வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>மின் நுகர்வோர்கள் பயன் பெறும் வகையில் மேலும் சில கீழ்க்கண்ட வசதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது</u>

1) இணையதளம் மூலம் குறைந்த மின்அழுத்த நுகர்வோர் மின் கட்டணம் செலுத்தும் வசதி

அ) வங்கி கடன் அட்டை மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி

1) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 2) பாங்க் ஆப் பரோடா

ஆ) வங்கி இணையதளம் (Net Banking) மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி (வங்கி வலைதளம்)

1) எச். டி. எப். சி. வங்கி 2) பாரத ஸ்டேட் வங்கி 3) கரூர் வைஸ்யா வங்கி
4) கனரா வங்கி 5) பாங்க் ஆப் பரோடா

இ) ஏ.டி.எம். மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி

இந்தியன் ஒவர்சீஸ் வங்கி

2) தமிழக அரசு கருவூலகங்களுக்கு மின்னணு கணக்கு சேவை மூலம் (**ECS**) மின் கட்டணம் செலுத்தும் வசதி

மேற்கண்ட இணையதள வசதிகளை தமிழக முழுவதும் உள்ள மின் நுகர்வோர்களை சென்றடைய சுமார் 3 கோடி ரூபாய் செலவில் வன்பொருளும், மென்பொருளும் (Hardware and Software) நிறுவப்பட்டு இன்று தமிழக மக்களுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

மின் நுகர்வோர்களின் நலனுக்காக மேற்கண்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக மின் நுகர்வோர்கள் இவ்வசதிகளை உபயோகப்படுத்தி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

4